மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 27/2015 C/W OS 122/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சந்திரசேகர் (எ) சந்திரசேகரன் | நாள் | 27.06.2023 |
| தகப்பனார் பெயர் | சண்முகம் | | |

**1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

40) என் சகோதரர் பெரியா கவுண்டர் மனநலம் பாதிக்கப்பட்டு இருந்து வந்த நிலையில், அவர் இறக்கும் வரை அவ்வாறு தான் மனநலம் பாதிக்கப்பட்டு இருந்தார் என்றால், சரிதான்.

41) ச.எண்.356/5C ல் யார் மண் எடுத்தார்கள் என்றால், என் தந்தை சண்முகம் தான் மண் எடுத்தார். செங்கல் சூலைக்காக வேண்டி எவ்வளவு அடி ஆழத்திற்காக மண் எடுக்கப்பட்டது என்றால், சுமார் 5 அடி ஆழத்திற்கு மண் எடுக்கப்பட்டது.

42) அவ்வாறு மண் அள்ளப்பட்டு தற்போது எவ்வளவு வருடங்கள் இருக்கும் என்றால், சுமார் 33 வருடங்கள் இருக்கும். அவ்வாறு மண் அள்ளியதில் கிடைத்த வருமானத்தை என் தந்தைதான் பெற்றுக்கொண்டார் என்றால், சரிதான். ஆனால் என் சகோதரர் கோவிந்தராஜனுக்கு சிறிது கடன் இருந்ததால் அதை பகுதி பணத்தை என் சகோதரருக்கு என் தந்தை கொடுத்துவிட்டார்.

43) என் சகோதரர் கோவிந்தராஜனுக்கு எவ்வளவு கடன் இருந்தது, அவர் யாரிடம் வாங்கியிருந்தார் என்ற விவரமும் என் தந்தைக்கு மண் அள்ளியதில் எவ்வளவு பணம் வந்தது, அதில் எவ்வளவு தொகையை என் சகோதரர் கோவிந்தராஜனுக்கு கொடுத்தார் என்ற விவரங்கள் எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால், சரிதான்.

44) நான் சொல்வது போல் மேற்படி ச.எண்.356/5C நிலத்தில் செங்கல் சூலைக்காக மண் அள்ளியதில் கிடைத்த பணத்தை என் தந்தை, என் சகோதரருக்கு கொடுத்தார் என நான் சொல்வது தவறானது என்றாலும், ச.எண்.356/5C ஐ பொறுத்து என் சகோதரர் கோவிந்தராஜனுக்கு எவ்வித தொடர்பும் இல்லை என்றாலும், சரியல்ல.

45) ச.எண்.356/7A ல் உள்ள 1 ஏக்கர் நிலத்தையும், அதிலுள்ள கதவு எண்.3/2–47 கொண்ட வீட்டையும் வாய்மொழி பாகமாக என் அண்ணன் கோவிந்தராஜனுக்கு கொடுத்துவிட்டதால் அவர் ச.எண்.356/5C ல் உள்ள நிலத்தில் எவ்வித உரிமையும் பெற வேண்டிய அவசியம் எழவில்லை என்றால், சரியல்ல. என் தந்தையை ஏமாற்றி என் அண்ணன் அந்த நிலத்தை வாங்கிவிட்டார். இது நாள் வரையில் மேற்படி நிலம் என் தந்தையின் பெயரில்தான் உள்ளது.

46) இவ்வழக்குரையில் கண்டுள்ள விவரங்கள் என் வழக்கறிருக்கு யார் சொன்னது என்றால், நான்தான் சொன்னேன். என் வழக்குரை 6–வது பத்தியில் என் தந்தை சண்முகம், என் அண்ணன் கோவிந்தராஜனுக்கு பலமுறை பணம் கொடுத்ததாக நான் சொல்லியுள்ள நிலையில் என் தந்தை எத்தனை முறை பணம் கொடுத்தார் என்ற விவரங்களை குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால், சரிதான்.

47) என் அண்ணன் கோவிந்தராஜன் நிறைய தொகையை செலவு செய்துவிட்டார் என நான் தெரிவித்துள்ள நிலையில் எவ்வளவு தொகையை அவ்வாறு செலவு செய்தார் என்ற விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால், சரிதான். எவ்வளவு தொகையை கொடுத்தார் என்றும், எவ்வளவு தொகையை செலவு செய்தார் என்று நேரடியாக தெரியாத நிலையில், என் அண்ணன் கோவிந்தராஜன் நிறைய தொகையை ஊதாரிதனமாக செலவு செய்துவிட்டார் என நான் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால், சரியல்ல.

48) என் அண்ணன் கோவிந்தராஜன் ச.எண்.356/7A2 மற்றும் ச.எண்.356/7A4 ல் உள்ள நிலத்தில் விவசாயம் செய்து தன் குடும்பத்தை பராமரித்து வந்தார் என்றால், சரியல்ல. விவசாயம் எதுவும் செய்யவில்லை. மேற்படி நிலத்தில் என் அண்ணன் கோவிந்தராஜன் வீடு கட்டிதான் வசித்து வந்தார். மேற்படி வீடு கட்டி 3 வருடத்தில் என் அண்ணன் இறந்துவிட்டார்.

49) ச.எண்.356/7A2 மற்றும் ச.எண்.356/7A4 ஆகியவற்றிலுள்ள நிலங்களை என் தந்தை எப்போதும் அனுபவித்ததில்லை என்றால், சரியல்ல. மேற்படி நிலத்தை என்

தந்தை தான் 1992ம் ஆண்டு வரை அனுபவித்து வந்தார். அதற்கு பின்பு குத்தகைக்கு விட்டுவிட்டார்.

50) நான் சொல்வது போல் மேற்படி நிலங்களை குத்தகைக்கு விட்டது என் அண்ணன் கோவிந்தராஜன் தான் என்றாலும், மேற்படி நிலத்தை குதவை வைத்தது கோவிந்தராஜனின் மனைவி இந்திராணி என்றாலும், மேற்படி நிலத்தை அவர் மீட்டு தற்போது விவசாயம் செய்து வருகிறார் என்றாலும், சரியல்ல.

51) தற்போது ச.எண்.356/7A2 ல் உள்ள நிலத்தை தற்போது இந்திராணி மற்றும் அவரது மகன் அருள் மற்றும் இந்திராணியின் மகள் கவிதா ஆகியோர்தான் விவசாயம் செய்து வருகிறார் என்றால், சரிதான்.

52) மொத்த தாவா சொத்தையும் சண்முகம் தான் அனுபவித்து வந்தார் என நான் வழக்குரையில் சொல்லியுள்ளது தவறானது என்றால், சரியல்ல. இத்தாவாவின் பிரதிவாதிகள் என் மீதும், மற்ற வாதிகள் மீதும் அ.வ.எண்.122/2015 என்ற வழக்கை என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், தாவா சொத்து அவர்களுடையது என கோரி அந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். அதை தவிர வேறு என்ன பரிகாரம் கோரியுள்ளனர் என்றால், எனக்கு சரியாக தெரியாது.

53) நான் சொல்வது போல், 1ம் பிரதிவாதி இந்திராணி எந்த காலகட்டத்திலும் தாவா சொத்தை விற்க முயற்சி செய்யவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால், 1ம் பிரதிவாதி தாவா சொத்தை விற்க முயற்சி செய்யவில்லை, ஆனால் எங்களை கேட்காமல் போர்வெல் போட்டார். மரத்தை வெட்டி விற்றுவிட்டார்.

54) மேற்படி சொத்து அவரது கணவருக்கு இருந்த பாகம் என்பதால், 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் போர்வெல் போடவும், மரத்தை வெட்டவும் எங்களது அனுமதி பெற தேவையில்லை என்றால், சரியல்ல.

55) என் தாயை, என் தந்தை 2–வதாக திருமணம் செய்து கொள்ள வேண்டியும், என் சகோதரர் கோவிந்தராஜன் என் தந்தைக்கு மூத்ததாரத்து மகன் என்பதாலும், தாவா சொத்தை என் தந்தை 2–வது திருமணம் செய்வதற்கு முன்னரே வாய்மொழியாக என் சகோதரர் கோவிந்தராஜனுக்கு பிரித்து கொடுத்துவிட்டார் என்பதால், அந்த சமயத்தில் நடந்த ஏற்பாடுகள் குறித்து எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றால், சரியல்ல.

(1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.